# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2017 சனவரி

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

### பகுதி A

### வினா இல. 01

இவ்வினா 20 புள்ளிகளுக்காக 10 OTQs வினாக்களைக் கொண்டுள்ளது.

இவ்வினாவுக்குப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மொத்தத்தில் இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

பல பரீட்சார்த்திகள் வினா இல. **1.3, 1.5, 1.8** ஆகியவற்றுக்குச் சரியான விடையினை வழங்குவதற்குத் தவறியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வினா இல. **1.3** இல், இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தொழிற்பாடுடன் தொடர்பற்ற விடயமே விடையாக எதிர்பார்க்கப்பட்டது என்பதை சில பரீட்சார்த்திகள் பொருட்படுத்தாது விட்டிருந்தனர். இதன் விளைவாக, அவர்கள் இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளைத் தெரிவுசெய்ததன் மூலம் தவறான விடையைக் குறிப்பிட்டிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பொருட்கள் விற்பனை ஒப்பந்தமொன்றில் கொள்வனவாளனுக்குக் கிடைக்கத்தக்க நிவாரணத்தை விற்பனையாளனுக்குக் கிடைக்கத்தக்க நிவாரணத்துடன் குழப்பியடித்ததன் காரணமாக வினா இலக்கம் **1.5** இற்குத் தவறான விடையினை வழங்கியிருந்தனர்.

வினா இல. **1.8** இல், 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் ஏற்பிசைவு செய்யப்பட்ட புலமைச் சொத்துக்களின் வகைகள் இரண்டினைக் கூறுமாறு கேட்கப்பட்டிருந்தது. இது நேரடியாக வினவப்பட்ட இலகுவான ஒரு வினாவாக இருந்தபோதிலும் பல பரீட்சார்த்திகள் இதற்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் **பகுதி A** இற்கு உயர்ந்தபட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒட்டுமொத்த பாடத்திட்டத்தையும் முழுமையாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

### பகுதி B

### வினா இல. 02

இவ்வினா சர்வதேச வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் நாணயக் கடித முறையை எவ்வாறு இயக்குவது என்பதை விபரிப்பதற்குத் தேவைப்படுத்தியிருந்தது. பல பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளத் தவறியிருந்த அதே வேளை குறைந்த எண்ணிக்கையிலானோர் நாணயக் கடித முறையைச் சரியாக விபரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் நாணயக் கடித முறையின் நன்மைகள், சர்வதேச வர்த்தகத்தின் வேறு கொடுப்பனவு முறைகள் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை.

### வினா இல. 03

நடைமுறை விவரணம் ஒன்று தரப்பட்டு அதில் கைமாறத்தகாத சாதனம் பற்றிய விடயம் இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்து திருப்திகரமான பதில்களையும் வழங்கியிருந்தனர். ஆயினும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், தரப்பட்ட விவரணத்தில் ‘‘கைமாறத்தகாதது’’

என குறுக்குக் கோடிடப்பட்டதன் விளைவுகளை விபரிப்பதற்குப் பதிலாக காசோலைகளின் குறுக்குக் கோடிடல், குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகள் தொடர்பான வங்கி நடைமுறைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையதான சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். குறிப்பிடத்தக்க பரீட்சார்த்திகள் சட்டப் பின்னணியை விவரிக்காது **D** பணத்தொகையைக் கோருவதற்கு உரித்துடையவர் அல்லது இல்லை என்பதை மாத்திரம் குறிப்பிட்டதனால் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை.

## வினா இல. 04

இவ்வினாவின் பகுதி (a) இல் 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிவழிக் குற்றங்கள் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்செயல்கள் மூன்றினை (03) கூறுமாறு கோரப்பட்டிருந்ததுடன் பகுதி (b) இல் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் தொடர்பாக இலங்கையில் நிலவுகின்ற வேறு நியதிச் சட்டங்கள் இரண்டினைக் (02) கூறும்படியும் கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பல்வேறு சம்பந்தமற்ற விடயங்களை அல்லது ஒரே குற்றச்செயலை மீண்டும் மீண்டும் உதாரணங்கள் மூலம் வழங்கியதன் காரணமாக இவ்வினாவின் பகுதி (a) இற்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் தொடர்பாக இலங்கையில் நிலவுகின்ற வேறு நியதிச் சட்டங்களைக் குறிப்பிடுமாறு கோரப்பட்ட இவ்வினாவின் பகுதி (b) இற்கு சிலர் சம்பந்தமற்றதும் தவறானதுமான நியதிச் சட்டங்களை எழுதியிருந்தனர்.

மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

## வினா இல. 05

இவ்வினா ஊழியர்களின் பணிக்கொடை உரித்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் பதவி விலகலின்போது பணிக்கொடையைப் பெறத் தகுதி பெறுவதற்காக ஊழியர் ஒருவரால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய கட்டளை விதிகள் இரண்டினை (02) எழுதுவதற்குத் தவறியிருந்தனர். அவர்கள் நியதிச் சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்பற்ற விதத்தில் பொதுவானதும் சம்பந்தமற்றதுமான விடைகளை எழுதியிருந்தனர்.

பகுதி (b) இல், **டிலான்** பணிக்கொடை பெறத் தகுதியானவர் எனக் கருதி அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகையினைக் கணிக்குமாறு கோரப்பட்டிருந்தது. சிலர் பணிக்கொடைக் கொடுப்பனவினை கணிப்பதற்காக அரை மாதச் சம்பளத்தை எடுப்பதற்குப் பதிலாக தவறுதலாக முழு மாதச் சம்பளத்தையும் எடுத்திருந்தனர். சிலர் பணிக்கொடை உரித்தினைக் கணிக்கும்போது கூட்டல்பிழைகளை விட்டிருந்தனர்.

மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.

## வினா இல. 06

இவ்வினா தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான ‘‘சுயாதீனம்’’ என்பதன் கருத்தை விபரிக்குமாறு கோரியிருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்விடயம் சம்பந்தமாக எவ்வித அறிவும் அற்றவர்களாகக் காணப்பட்டதையும் முற்றிலும் சம்பந்தமற்றதும் தவறானதுமான விடைகளை வழங்கியிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பல பரீட்சார்த்திகள் சுயாதீனம் என்பது இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது என்ற உண்மையைப் பொருட்படுத்தவில்லை. ஒன்று மனதளவில் சுயாதீனமாக இருப்பது மற்றையது தோற்றத்தில் சுயாதீனமாக இருப்பது. சில பரீட்சார்த்திகள் விடையளிக்கும்போது சுயாதீனம் என்பதை தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாக விபரிக்காது பொதுப் பதத்தில் சுயாதீனம் என்பதன் கருத்தை விபரித்திருந்தனர்.

மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை.

## பகுதி C

### வினா இல. 07

இவ்வினாவின் பகுதி (a) ஆனது, காப்புறுதிச் சட்டம் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவினைப் பரீட்சித்துள்ளது. காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புபட்ட வகையில் விடையினை ஆராய்வதற்கு உரிய விடயங்களை முன்வைக்காது **XYZ காப்புறுதிக் கம்பனி**யிடமிருந்து காப்புறுதிக் கொள்கையின் கீழ் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு **சப்பரமது** உரித்துடையவரா, இல்லையா என்பது பற்றி மட்டுமே பரீட்சார்த்திகள் கவனத்திற் கொண்டிருந்த பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் தங்களது விடைகளை விபரிக்கும்போது காப்புறுதி பற்றிய இழப்பீட்டு எண்ணக்கருவுடன் தரப்பட்ட சம்பவத்தை தொடர்புபடுத்தியிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் காப்புறுதியின் தொடர்பற்ற எண்ணக்கருக்களை பிரயோகித்திருந்தனர். எனவே விடையளிப்பதற்கு முன் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்வது மிகவும் தேவையானதொன்றாக இருக்கிறது.

பகுதி (b) ஆனது ஓரளவு இலகுவான வினாவாக இருந்ததுடன் அதில் காசோலை ஒன்றின் பண்பியல்புகள் நான்கினைக் (04) கூறுமாறு கேட்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வினாவில் தெளிவாக ‘‘கூறுக’’ எனக் கேட்கப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் காசோலை ஒன்றின் பண்பியல்புகளை விவரித்து எழுதியிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு முன்னர் வினாவில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பது பற்றி விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

### வினா இல. 08

பகுதி (a) இல் வினவப்பட்டதற்கிணங்க, பெரும்பாலான பரீட்சார்த்திகள் தனியுடைமை வியாபாரம் ஒன்றை பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றாக மாற்றுவதற்கு திருப்திசெய்யவேண்டிய தேவைப்பாடுகளை விபரித்ததன் மூலம் பொருத்தமான விடைகளை வழங்கியிருந்த அதே வேளை பகுதி (b) இற்கும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் சிறப்பியல்புகள் மூன்றினையும் (03) விபரித்திருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவுக்கு விடையளிப்பதில் பிழை விட்டிருந்தனர்.

பகுதி (a) இல் வினவப்பட்டதற்கிணங்க, தனியுடைமை வியாபாரம் ஒன்றை பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றாக மாற்றுவதற்கு திருப்திசெய்யவேண்டிய தேவைப்பாடுகளை விபரிக்கும்போது குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் கூட்டிணைப்புடன் தொடர்புடைய ஆவணங்களை குறிப்பிட்டிருக்கவில்லை. கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவின் பகுதி (b) இற்கு விடையளிக்கும்போது பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் சிறப்பியல்புகளை விபரிப்பதற்குப் பதிலாக பிழையாக வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் சிறப்பியல்பு களை விபரித்திருந்தனர். மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

### வினா இல. 09

இவ்வினா முகவராண்மைச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் பகுதி (a) மற்றும் பகுதி (b) ஆகிய இரு பகுதிகளுக்கும் நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இங்கு தரப்பட்ட விவரணத்தில் முன்னாள் முகவர் ஒருவரால் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு முன்னாள் முதல்வர் பொறுப்புடையவரா என்பது பற்றி விபரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்க பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் காணப்படும் முரண்தடை முகவராண்மை மூலமான முதல்வர் - முகவர் தொடர்புடை மையை அடையாளங்காணத் தவறியிருந்தனர். கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விவரணத்தில் தரப்பட்ட விடயங்களையோ, சரியான கோட்பாட்டு அடிப்படைகளையோ அடிப்படையாகக் கொண்டு விடைகளைப் பகுத்தறியாது **சில்வா குமாரிடமிருந்து** இழப்பீட்டைப் பெறுவதற்குத் உரித்துடையவர் அல்லது இல்லை என்பதை மாத்திரம் எழுதியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அத்துடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்காக முகவர் ஒருவரின் கடமைகள் நான்கினை (04) வெற்றிகரமாக எழுதியிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்திகரமானது.

## <u>பகுதி D</u>

### வினா இல. 10

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டது.

இவ்வினாவின் பகுதி (a) ஆனது, ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் தபால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புடையவாறு, **B** இன் சட்ட உரிமையினை கலந்துரையாடத் தேவைப்படுத்தியிருந்தது. இப்பகுதிக்குப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒப்பந்தச் சட்டத்தைத் தொடர்புபடுத்தாது, வினாவில் தரப்பட்ட விடயங்களையே விடையாக குறிப்பிட்டிருந்த குறிப்பிட்ட அளவு பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். அத்தகைய பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் **B** இன் சட்ட உரிமை பற்றிய ஒரு தீர்மானத்தை மேற்கொண்டிருக்கவில்லை. குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் தபாலில் ஏற்பிசைவு தெரிவிப்பதை எதிர்பார்க்கின்ற தரப்பினர்களுக்கு இடையே பிரயோகிக்கப்படவேண்டிய தபால் விதி பற்றிய விடயங்களை பொருட்படுத்தாது விட்டிருந்தனர்.

மொத்தத்தில், வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

இவ்வினாவின் பகுதி (b) ஆனது, விவரணத்தில் தரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 100 கணினிகளுக்குமான நட்டத்தினை **கமல்** ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பது பற்றி கலந்துரையாடக் கோரியிருந்தது. இது பொருட்கள் விற்பனைச் சட்டத்துடன் தொடர்புடையது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபட்ட தற்போதுள்ள பொருட்கள், உறுதியாக அறிய முடியாத பொருட்கள், குறித்த பொருட்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய சரியான சட்ட விடயங்களை அடையாளங் காணத் தவறியிருந்தனர். இதன் விளைவாக, ஆதரவளிக்கும் விடயங்களுடன் தீர்மானமொன்றுக்கு வர அவர்கள் தவறியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளால் மிகவும் குறைந்தளவில் விடையளிக்கப்பட்ட வினா இதுவாகும். அதிகளவான சந்தர்ப்பங்களில், பரீட்சார்த்திகள் தொடர்பில்லாத விடயங்களை வழங்கியிருந்ததுடன் ஏனைய வேறு சந்தர்ப்பங்களில் வினாவில் தரப்பட்ட விடயங்களையே விடையாக மீளவும் அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பரீட்சிக்கப்பட்டிருந்த இவ்விவரணத் தைக் குழப்பியடித்திருந்தனர்.

மொத்தத்தில், வினாவின் இப்பகுதியானது பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறவிட்ட வினாவாக இருந்தது.

- - -

### பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.
3. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.
4. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
5. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.
6. வினாப்பத்திரத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.
7. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -